(*b*) if so, the stage at which the matter stands?

THE HON. SRI V. RAMAIAH : The District Revenue Officer, Ramanathapuram has submitted to the Board of Revenue three proposals for the appointment of special staff for work connected with assignment of lands in Ramanathapuram district. The District Revenue Officer's proposals through the Board of Revenue are awaited.

Crop Insurance Scheme

* 387 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether a draft bill on Crop Insurance Scheme has been circulated by the Government of India to Madras Government for ascertaining their views; and

(*b*) if so, the views of the Government on Crop Insurance Scheme?

THE HON. SRI P. KAKKAN :

(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கிடமில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know, Sir, whether the Madras Government has suggested to the Central Government, the necessity for introducing the Crop Insurance Scheme?

THE HON. SRI P. KAKKAN : Not now, Sir.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : எதிர்பாராத மழையின் காரணமாகப் பயிர்கள் சேதப்பட்டு விவசாயிகள் நஷ்டப்படுகிற படியால் இதற்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இன்ஷூரன்ஸ் திட்டம் பற்றிய டிராப்ட் பில் சர்குலேட் பண்ணுவது பற்றிய கேள்வி இது. மத்திய அரசாங்கம் முடிவு செய்வதைப் பொறுத்து இந்த அரசாங்கம் பின்னர் அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

சேலம் மாவட்டத்தில் தீவிர விவசாய திட்டம்

* 388 **கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தீவிர விவசாய திட்டத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆமெனில், எந்தெந்தப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப் படும் ?

24th March 1964]

THE HON. SRI P. KAKKAN : (a) No.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. கமலநாதன் : தீவிர சாகுபடித் திட்டம் மற்ற எல்லா மாகாணங்களிலும் எல்லாவிதப் பொருள்களுக்கும் இருக்கும்போது சேலம் மாவட்டத்தில் மட்டும் அந்தத் திட்டம் மேற்கொள்ளப் படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : தீவிர சாகுபடித் திட்டத்தை மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்கள் சொல்வதற்குத் தக்கபடி வைக்கிறோம். அந்த முறையில் அவர்கள் தஞ்சை ஜில்லாவைச் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : இப்போது தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டம் அமலில் இருந்தும் ஒரு ஏக்கருக்கு 1,500 பவுண்டு நெல்தான் விளைகிறது. சேலம் மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டம் இல்லாமலேயே ஏக்கருக்கு 4,500 பவுண்டு விளைவிக்கப்படுகிறது. ஆகவே, சேலம் மாவட்டத்தில் இந்த தீவிர சாகுபடித் திட்டத்தை அமல்படுத்தினால் 5,500 பவுண்டு 6,000 பவுண்டாக அதிகரிக்க வழி ஏற்படுமல்லவா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய அரசாங்கப் பணம், போர்டு பவுண்டேஷன் பணத்தால் இந்தத் திட்டம் அமல் நடத்தப் படுகிறது. ஆகவே, எந்த ஜில்லாவை இந்தத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்வது என்பதைப் பற்றி மத்திய அரசாங்கம்தான் முடிவு செய்யவேண்டும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மத்திய சர்க்கார் தீவிர சாகுபடி திட்டத்தை அமல்படுத்துவதற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கும் என்று சொன்னார்கள். இன்ன இடங்களை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று நம்முடைய சர்க்கார் சிபாரிசு கூட செய்ய முடியாதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதற்கு ஐந்து தகுதிகள் இருக்கின்றன. அந்த ஐந்து தகுதி கள் இருந்தால் மத்திய சர்க்கார் அந்த பகுதியைத் தேர்தெடுக் கிறார்கள். அதைப்படிக்கிறேன்.

(1) maximum irrigation facilities (assured water-supply).

(2) minimum natural hazards such as floods, drought, etc.

(3) production of the main foodgrains consumed in the tract.

(4) existence of well-developed co-operatives and panchayat organisation.

(5) maximum facilities for increasing agricultural production in a comparatively short-time.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தீவிர சாகுபடித் திட்டத்திற்காக ஆகும் செலவோடு வருகிற வருமானத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் வருமானம் குறைவாக இருக்கிறது என்பதை அரசாங்கம் அறியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வருமானம் குறைவு என்று சொல்ல முடியாது. எங்கெங்கு பாக்கேஜ் ஸ்கீம் ஏரியாக்கள் இருக்கின்றனவோ, அந்த இடத்தில் நிச்சயமாக நன்மை இருக்கிறது.

திரு. ஆ. துரையரசன் : தீவிர சாகுபடித் திட்டத்தை எந்தெந்த வட்டாரத்தில் விஸ்தரிக்கலாம் என்பது பற்றி பஞ்சாயத்து கூட்டு மன்ற அங்கத்தினர்களுடைய ஒப்புதல் கேட்கப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய அரசாங்கம் பார்த்து ஒரு ஜில்லாவை எடுக்கும் காலத்திலே அந்தத் தகவல் நம்முடைய அரசாங்கத்துக்கு வந்த பிறகு எந்தெந்த வட்டாரத்தில் வைப்பது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. மு. பொ. வடிவேல் : ஏழு மாவட்டங்களில் தீவிர சாகுபடி திட்டம் அமல் படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஏழு மாவட்டங்களின் பெயர்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாநிலத்தில் உள்ள ஏழு மாவட்டங்கள் அல்ல. இந்தியா பூராவிலும் ஏழு மாவட்டங்கள். நம்முடைய மாநிலத்திலே தஞ்சாவூர் மாவட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : தீவிர சாகுபடித் திட்டத்தை எந்தெந்த ஜில்லாக்களில் அமல் செய்யலாம் என்பதை மத்திய சர்க்கார் நிர்ணயிக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு நிர்ணயிக்கும்போது சென்னை அரசாங்கத்தினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுச் செய்கிறார்களா அல்லது அவர்களுடைய அலுவலர்களைக் கொண்டே செய்து விடுகிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : நம்மைக் கலந்து கொள்ளாமல் அவர்கள் எப்படி இங்கே உள்ளே நுழைய முடியும்? நம்மைக் கலந்து கொண்டுதான் செய்கிறார்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சேலம் மாவட்டத்தைப் பரிசீலனை செய்து தீவிர சாகுபடித் திட்டத்தை சேலம் மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தியாவிலே எந்தெந்த மாகாணங்களில் எந்தெந்த மாவட்டங்களை எடுத்துக்கொள்வது என்பது மத்திய சர்க்கார் முடிவு செய்யவேண்டியது. அவர்கள் சேலத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

24th March 1964]

திரு. ம. கமலநாதன் : மத்திய அரசாங்கம் சிபாரிசு செய்த பிறகுதான் தீவிர சாகுபடித் திட்டத்தை அமல் நடத்துவதாகச் சொல்கிறார்கள். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் மற்ற பல மாவட்டங்களில் சேலம் மாவட்டத்தைத் தவிர பல பொருள்களைப் பயிரிடுவது தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் வந்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த முறையில் சேலம் மாவட்டத்தையும் எடுத்துக் கொள்ள அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நான் ஏற்கனவே சொன்னது போல் ஐந்து கண்டிஷன்களுக்கு உள்ளாக இருந்தால்தான் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்களே, கேட்கப் பட்ட உப கேள்விகளுக்கெல்லாம் மத்திய சர்க்கார் செய்ய வேண்டும் என்றே குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநில சர்க்கார் தானாகவே அமல் நடத்துகிற காரியந்தான் என்ன ?

MR. SPEAKER : It is too general a question

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : அமைச்சர் அவர்கள் சொன்ன ஐந்து கண்டிஷனில் தண்ணீர் தவிர, மற்ற எல்லா வசதிகளும் சேலத்தில் இருக்கின்றன. தண்ணீர் கூட சில பகுதிகளில் இருக் கிறது. ஆகவே, உடனடியாக தீவிர சாகுபடித் திட்டத்தைச் சேலத்தில் அமல் படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தண்ணீர் இருக்கவேண்டுமென்பதுதான் முதல் கண்டிஷன். அது இருக்குமானால் மற்ற உதவிகளைச் செய்ய முடியும்.

திரு. ஆ. துரையரசன் : அமைச்சர் அவர்கள் பதிலில் தண்ணீர் வசதி இருக்கிறதா என்று முதலில் பார்க்கிறோம் என்று சொன் னார்கள். ஆவுடையார் கோவில் கூட்டு மன்றத்தில் தண்ணீர் வசதி கிடையாது. அதன் காரணமாக தீவிர சாகுபடித் திட்டம் ஒழுங்காகச் செயல்படவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை பாக்கேஜ் ஸ்கீம் ஏரியா என்று எடுத்திருக்கிறார்கள். அது இப்போது அமலில் இருந்து வருகிறது. அதை வைத்துப் பின்னால் ஒரு முடிவுக்கு வரலாம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தீவிர சாகுபடித் திட்டத்தின் மூலமாக மொத்தமாக எடுத்துக் கொண்டால் லாபகரமாக இருக் கிறது என்று கூறலாமே தவிர, தனிப்பட்ட வியாபாரிகள் போடுகிற உரத்தினால் அவர்களுக்கு லாபம் இல்லை; விவசாயிகள் கடனைக் கூடத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : சில இடங்களில் அப்படி இருக்கலாம். தனிப்பட்ட விவசாயிகள் உரம் வாங்கிப் போட்டு நல்ல லாபம் அடைந்து வருகிறார்கள்.